Registered as a Newspaper

A/L 86
DAY CLASS
Zoology - Mr. சசன் B.Sc.
திங்கள், புதன், வெள்ளி
பி.ப. 3.30
'பொருளாதார விலங்கியல்'
செவ்வாய், வியாழன்
'பிறப்புரிமையியல்'
ஆரம்பம்: 5—2—86
Bond Institutes
Hospital Road,
JAFFNA.

# உதயன்

விலை ரூ-1/=

A/L 88
★ விஞ்ஞானம்
★ வர்த்தகம்
★ கலைப் பிரிவுகளுக்கான
புதிய வகுப்புக்கள்
ஆரம்பம்:
9 - 2 - 1986
Bond Institutes
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஸு தை மீ உ 20 ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1406 ரபி. ஐ. அவ். பிறை 22 (02:02:1986) UTHAYAN —A LIVELY TAMIL DAILY கதிர்:-65

## சந்தைக்குச் சென்ற 35 பேர் எங்கே?

### வட்டக்கச்சிவாசிகள் நிலை மர்மம்

கிளிநொச்சி, பெப். 2

வட்டக்கச்சியிலும் அயற்கிராமங்களிலும் இருந்து கிளிநொச்சிச் சந்தைக்கு ஒருவானில் வந்த சுமார் 35 தமிழ்ப் பொது மக்களின் கதி மர்மமாக உள்ளது.

இவர்கள் வழமை போல், சந்தைமுறையான நேற்று தமது விளை பொருள்களை விற்றுத் தேவையான பொருள்களைக் கொள்முதல் செய்வதற்காக காலை சுமார் 7 மணியளவில் கிளிநொச்சி நோக்கிப் புறப்பட்டனர்.

ஆனால் நேற்று 3 மணி வரை வானில் சென்ற எவரும் வீடு திரும்பவில்லை. வானையும் காணவில்லை.

அவர்களை கிளிநொச்சியில் தேடியும் கண்டு பிடிக்க முடியவில்லை.

கிளிநொச்சி சந்தையை நோக்கி வந்தவர்களில் பெரும்பாலானோர் பெண்கள். ஒருசில இளைஞர்களும் அடங்குவர்.

இதற்கிடையில் கிளிநொச்சியில் 29 பயங்கரவாதிகள் சுட்டுக்கொல்லப் பட்டிருப்பதாக இலங்கை அரசு நேற்றுத் தெரிவித்தது.

# கிளிநொச்சியில் இன்று 9 மணி நேர ஊரடங்கு அமுல்

### படைகள்---போராளிகள் மோதலைத் தொடர்ந்து அறிவிப்பு

— கொழும்பிலிருந்து சிறப்புச் செய்தியாளர் —

கொழும்பு, பெப். 2

கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணி தொடக்கம் இரவு ஏழு மணிவரை ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் இருக்கும்.

இந்த அறிவிப்பை பாதுகாப்பு அமைச்சு நேற்றிரவு வெளியிட்டது.

ஊரடங்கு அமுலில் இருக்கும் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் பிரதேச எல்லை விவரம் வருமாறு:-

கிழக்கு: அக்கராயன் குளம் வரை.
மேற்கு: யாழ்ப்பாணம் கண்டி வீதி வரை.
வடக்கு: ஆனையிறவு, ஆனையிறவு வாவிவரை.
தெற்கு; முருகண்டி வன்னேரிக் குளம் வரை.

தர்மபுரம், கல்மடு ப் பகுதிகளில் கடந்த மூன்று நாட்களாக ஆயுதப் படையினருக்கும் போராளிகளுக்கும் இடையில் கடும் மோதல்கள் நடைபெற்று வருவதாகச் செய்திகள் கிடைத்துள்ளன.

அந்த மோதல்களுக்கும் ஊரடங்கு உத்தரவுக்கும் சம்பந்தம் இருக்கலாம் என்று உத்தியோகப்பற்றற்ற வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்தன.

### வட்டக்கச்சியிலும் நேற்றுக் காலை மோதல்

கொழும்பு பெப். 1

வட்டக்கச்சிப் பகுதியில் நேற்று அதிகாலை போராளிகளுக்கும் ஆயுதப் படையினருக்கும் இடையில் மோதல் இடம் பெற்றதாக அறியப்படுகிறது.

மோதலின்போது படையினர் தரப்பில் பாதிப்பு ஏற்பட்டதாக உத்தியோகப்பற்றற்ற செய்திகள் தெரிவித்தன.

படை வீரர்களில் சிலர் அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப் பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

### இராணுவ வீரரின் மனைவி சடலமாக மீட்பு

கொழும்பு, பெப். 2

பொலன்னறுவை மாவட்டத்தில் மெதிரிகிரியா என்னும் இடத்தில் இராணுவ வீரர் ஒருவரின் மனைவியின் சடலம் காட்டுக்குள் இருந்து கண்டு பிடிக்கப்பட்டது.

முல்லைத்தீவில் 6ஆவது நாளாகச் சமர்:

## பீரங்கிப் படகிலிருந்து வேட்டுக்கள்!

### 100க்கு மேற்பட்ட வீடுகள் சேதம்

யாழ்ப்பாணம், பெப். 2

முல்லைத்தீவில் ஆறுவது நாளாக போராளிகளுக்கும் ஆயுதப்படையினருக்கும் இடையில் கடும் சமர் நடந்தது.

இந்த சமரின்போது கடலில்நின்ற கடற்படையினரின் பீரங்கிப் படகு ஒன்று சுமார் ஒரு மணி நேரம் வேட்டுக்களைத் தீர்த்தது. 100க்கும் மேற்பட்ட வீடுகள் சேதம் அடைந்தன.

போராளிகள் பீரங்கிப் படகை நோக்கி ராக்கெட் லோஞ்சர்களினால் பதில் தாக்குதல் நடத்தினர்.

தாக்குதல்கள் பதில் தாக்குதல்களுக்கு மத்தியில் ஆயிரக்கணக்கான மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி இடம் பெயர்ந்து சென்றனர்.

ஹெலிக்கொப்டர் மூலமும் பல இடங்களில் குண்டுகள் வீசப்பட்டன என்று அறியப்படுகிறது. போராளிகளும் ஹெலிக்கொப்டர்களை நோக்கி ராக்கெட் லோஞ்சர்களினால் பதில் தாக்குதல் நடத்தினர்.

இச்சம்பவங்களின் போது காயம் அடைந்த 12பேர் முல்லைத்திவு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர். ஆயுதப்படையினரின் மோட்டோ ஷெல் குண்டுகளாலேயே இவர்கள் காயம் அடைந்தனர்.

நேற்றைய சமரில் ஆயுதப்படையைச் சேர்ந்த 6 பேர் காயம் அடைந்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

### செய்திச் சரம்

#### வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது

கொழும்பு, பெப். 2

அரசாங்கம் அளித்த வாக்குறுதிகளை அடுத்து டாக்டர்களின் வேலை நிறுத்தத்தைக் கைவிடுவதென்று அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் நேற்று முடிவுசெய்தது.

#### காஸ் சிலிண்டர் தடுத்துவைப்பு

யாழ்ப்பாணம், பெப். 2

கொழும்பிலிருந்து வட பகுதிக்கென கொண்டு வரப்பட்ட காஸ் நிரப்பப் பட்ட சிலிண்டர்கள் லொறிகள் ஆனையிறவு இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

#### மேலதிக இராணுவம்

கொழும்பு, பெப். 2

கிளிநொச்சிக்கும், முல்லைத்தீவுக்கும் மேலதிக ஆயுதப்படையினர் ஹெலிக்கொப்டர் மூலம் நேற்று அனுப்பி வைக்கப்பட்டனர்.

#### நோர்வூட்டில் கடை எரிப்பு

கொழும்பு, பெப். 2

நோர்வூட்டில் தமிழ் வர்த்தகர் ஒருவரின் கடை நேற்று சூறையாடப்பட்டு கொளுத்தப்பட்டது.

#### ஜீப்மீது தாக்குதல்

கொழும்பு, பெப். 2

டிக்கோயாவில் பொலீஸ் ஜீப் ஒன்றை தோட்டத் தொழிலாளர்கள் சூழ்ந்து நின்று தாக்கினர். இதனால் பொலீஸ்காரர் ஒருவர் காயமடைந்தார்.

#### ரயில் நிலையம் கொளுத்தப்பட்டது

கொழும்பு, பெப். 2

தலவாக்கலைப் பகுதியில் உள்ள ரயில் நிலையம் ஒன்று நேற்று இனம் தெரியாதோரால் கொளுத்தப்பட்டது.

### கைதானவர் சடலமாக கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம், பெப். 2

நேற்று முன்தினம் வவுனியா பகுதியில் உள்ள தெற்சிலுப்பைகுளம் என்னும் இடத்தில் ஆயுதப் படையினரால் கைது செய்யப்பட்ட ஒருவர் நேற்றுக்காலை மூன்று முறிப்பு பகுதியில் உள்ள வீதியில் துப்பாக்கிச் சூட்டுடன் சடலமாகக் கிடந்தார்.

இவரது பெயர் கோபாலசாமி சிவபாலன் வயது 22. திருமணம் ஆனவர். கமம் செய்பவர்.

இவரது சடலம் வவுனியா ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்தது.

இதுபற்றி இவரது சகோதரர் பிரஜைகள் குழுவுக்குப் புகார் செய்துள்ளார்.

### முச்சந்திமுரளி



ஊரடங்கார் தலவாக்கலையிலை இருந்து திடீர் எண்டு இத்தனை மைல் தாண்டி கிளிநொச்சிக்கு வந்திட்டார். இன்னும் எத்தனை இடத்துக்கு தாண்டிப் பாய்வாரோ ஆருக்குத் தெரியும்!

### டிராக்டர் மீட்கப்பட்டது

யாழ்ப்பாணம், பெப். 2

யாழ் மாநகரசபைக்குச் சொந்தமான டிராக்டர் ஒன்று நேற்றுக் காலை கடத்தப்பட்டது. எனினும் இயக்கம் ஒன்றின் தீவிர முயற்சி காரணமாக அதுமீட்கப்பட்டது.

நேற்றுக் காலை கடமைக்குப் புறப்பட்ட நேரம் பருத்தித்துறை வீதியில் வைத்து இந்த டிராக்டர் கடத்தப்பட்டது.

இதுபற்றி ஈ. பி. ஆர். எல். எப். முகாமுக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்தே டிராக்டர் மீட்கப்பட்டது.

இதனைக் கடத்திய மூவர் பிடிக்கப்பட்டு விசாரிக்கப்பட்ட பின்பு விடுவிக்கப்பட்டனர்.

### சுபநேரம்

2.2.1986


ஞாயிற்றுக்கிழமை

சுபநேரம்:
9.16முதல் 11.06 வரை

ராகுகாலம்:
5 06 முதல் 6.36 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

அட்டமி முன் இரவு 8.32 வரை

திருநீலகண்டர் குருபூஜை



ஆயிரம் மீட்டர் பாதுகாப்புவலயத்தை வாபஸ் பெறுமாறு கோரி பத்து லட்சம் கையெழுத்துத் திரட்டும் இயக்கம் நேற்று ஆரம்பமாகியது.

நான்கு சமயங்களைச் சேர்ந்தவர்களான பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள், யாழ். ஆயர் கலாநிதி தியோகுப்பிள்ளை, தென்னிந்திய திருச்சபை யாழ் ஆதீனம் ஆயர் வண. டி. ஜே அம்பலவாணர், இமாம் மௌலவி சுகத்துல்லா ஆகியோர் கையெழுத்திட்டு இவ்வைபவத்தை ஆரம்பித்துவைப்பதை முதலாவது படத்தில் காணலாம். பிரஜைகள்குழுக்களின் இணைப்புக்குழுத் தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பியும் படத்தில் காணப்படுகிறார்.

பேராசிரியர் கு. நேசையா, 'ஈழநாடு' ஆசிரியர் திரு. என். சபாரத்தினம் ஆகியோர் கையெழுத்திடுவதையும், அகதிகள் புனர்வாழ்வுக் கழகத் தலைவர் திரு. கா. விசுவலிங்கம், யாழ், பிரஜைகள் குழுச் செயலாளர் திரு. ஆர். பாலசுப்பிரமணியம், கன்னுசம் பிரஜைகள் குழுத் தலைவர் திரு. வி. மாணிக்கவாசகர் ஆகியோர் அருகில் நிற்பதையும் இரண்டாம் படத்தில் காணலாம்.

### டிராக்டர்கள் விடுவிப்பு செல்லையா இன்னும் இல்லை

நல்லூர், பெப். 2

கடந்த 30ஆம் திகதி வியாழக்கிழமை அரியாலையில் கடத்திச் செல்லப் பட்ட சதிர்காமு செல்லையாவின் இரண்டு டிராக்டர்களும், நேற்று அவரது இல்லத்துக்கு அருகாமையில் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டன.

டிராக்டர்களுடன் கொண்டு செல்லப்பட்ட சதிர்காமு செல்லையா நேற்றிரவுவரை விடுதலை செய்யப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இவருக்கு 12 பிள்ளைகள் இருப்பது குறிப்பிடத்தக்கது.

### 10 லட்சம் கையொப்பம் சேகரிக்கும் இயக்கம் நேற்று ஆரம்பம்!

நல்லூர், பெப். 2

10 லட்சம் கையொப்பம்சேகரிக்கும் மாபெரும் இயக்கம் நேற்று நல்லூர் இந்துவிடுதியில் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்துவைக்கப்பட்டது.

✶ பாதுகாப்பு வலயம் உடனடியாக வாபஸ் பெறப்படவேண்டும்.

✶ முதற்கட்டமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சனநெருக்க

(4—ஆம் பக்கம் பார்க்க)

வடக்கு - கிழக்கு இணைப்பே ஒரு பிரச்சினை

### இரண்டு, மூன்று தினங்களில் எல்லாம் தெரிந்து விடும்

கொழும்பு, பெப். 2

வடக்கு - கிழக்கு இணைப்புத்தான் எம் முன்னர் உள்ள ஒரே ஒரு பிரச்சினை. வேறு பிரச்சினைகளே இல்லை. இரண்டு, மூன்று தினங்களில் எல்லாம் தீர்மானித்து விடுவோம். அப்போது தெரிந்துவிடும்.

தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி தம்மை நேற்றுச் சந்தித்த யாழ் தூதுக் குழுவினரிடம் மேற்கண்டவாறு கூறினார்.

பாதுகாப்பு வலயங்கள் பற்றியும் இராணுவ முகாம்கள் பற்றியும் தூதுக்குழுவினரிடம் திரு. லலித் அத்துலத் முதலி விளக்கம் அளித்துக் கொண்டிருந்தபோது யாழ் தூதுக் குழுவில் அங்கம் வகித்த அரச அதிகாரி ஒருவர்—

''பாதுகாப்புப் பிரச்சினைக்கான மூலகாரணத்துக்கு தீர்வு கண்டுவிட்டால் இதெல்லாம் தேவை இல்லையே!'' என்று வினவினர்.

அப்பொழுது அமைச்சர் ''இரண்டு, மூன்று தினங்களில் தீர்வு வந்துவிடும். எம் முன்னர் உள்ள ஒரே ஒரு பிரச்சினை வடக்கு - கிழக்கு இணைப்புப்பற்றியதே'' என்று பதில் அளித்தார்.

## வலயம் வாபஸ் இல்லை

### மேலும் முகாம்கள் நிறுவப்படும்

#### தம்மைச் சந்தித்த யாழ். அதிகாரிகளிடம் லலித்

கொழும்பு, பெப். 2

பாதுகாப்புப் படையினரின் முகாம்களை அகற்ற முடியாது, பாதுகாப்பு வலயப்பிரகடனத்தையும் வாபஸ் செய்யமுடியாது. பாதுகாப்பை பலப்படுத்த யாழ் குடாநாட்டில் மேலும் முகாம்கள் அமைக்கப்படும்.

இப்படி தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி சொன்னார்.

யாழ்ப்பாணம் அரச அலுவலகங்கள், வங்கிகள் ஆகியவற்றின் தலைவர்கள், யாழ் அரச அதிபர், யாழ் வைத்திய அத்தியட்சகர் உட்பட 20 பேர்வரை பாதுகாப்பு அமைச்சு அலுவலகத்தில் அமைச்சர் லலித் அத்துலத் முதலியை நேற்றுச் சந்தித்தனர்.

பிற்பகல் 3 மணியில் இருந்து மாலை 5 மணி வரை நடந்த இச் சந்திப்பில் ஆயுதப்படை அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

பாதுகாப்பு வலயப் பிரகடனத்தினால் யாழ் குடா மக்கள் எதிர்நோக்கும் கஷ்டங்கள் பற்றி அமைச்சரிடம் விஸ்தாரமாக எடுத்துக் கூறப்பட்டது.

எல்லாவற்றையும் கேட்ட அமைச்சர் பதில் அளிக்கையில் சொன்னதாவது;

பாதுகாப்புப் படையினரின் முகாம்களை அகற்ற முடியாது பாதுகாப்பு வலயப் பிரகடனத்தையும் வாபஸ் செய்ய முடியாது.

யாழ் குடாநாட்டில் பாதுகாப்பைப் பலப்படுத்த மேலும் முகாம்கள் அமைக்கப்படும்.

பாதுகாப்பு வலயம், முகாம்களினால் யாழ் அரச அலுவலகங்களுக்கு சேதம் ஏற்படாது.

அரச அதிகாரிகள், வைத்திய அதிகாரிகள் பயமில்லாமல் அலுவல்களைக் கவனித்துக்கொள்ளலாம்.

பாதுகாப்புப் படையினர் கண்டபடி இயங்க மாட்டார்கள். கடந்த இரண்டு வருடங்களாக படையினர் பொறுப்புணர்ச்சியுடன் தான் செயல்படுகின்றனர்.

(4—ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## அந்தநாளை திரும்பி பார்க்கிறார் தேவிகா

தமிழ்த் திரையுலகில் ஒரு காலத்தில் கொடிகட்டிப் பறந்தவர் தேவிகா. பாவமன்னிப்பு, பலே பாண்டியா, நீலவானம், நெஞ்சில் ஓர் ஆலயம் போன்ற பாடல்களில் நவரசம் தோன்ற நடித்தவர் அவர்.

அவர் தனது ஆரம்ப காலத்தைத் திரும்பிப் பார்க்கிறார்.

''நான்நடித்த முதல் தமிழ்ப்படம் முதலாளி. இதில் எஸ். எஸ். ராஜேந்திரனின் ஜோடியாக நடித்தேன். இப்படத்தில் நானோ சாதாரண ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த பெண்.

வெளிநாட்டில் படித்துவிட்டு வரும் முதலாளி ஒருவரின் மகனாக இலட்சிய நடிகர் எஸ். எஸ். ஆர். நடித்தார். காதல், சோகம் கலந்த இந்தப் படம் எனக்கு நல்ல வரவேற்பை பெற்றுத் தந்தது.

நானும் எஸ். எஸ். ஆரும் புதுமுகமாக அறிமுகமான ''முதலாளி'' தீபாவளி வெளியீடாகத் திரைக்கு வந்தது.

அந்த நேரத்தில் இதற்குப் போட்டியாக எம். ஜி. ஆரின் மகாதேவியும் சிவாஜியின் அம்பிகாபதியும் ரிலீஸ் செய்யப்பட்டன.

புதுமுகங்களான நாங்கள் நடித்த படம் தொடர்ந்து ஓடாது என்றும், படுதோல்வி அடையப் போகிறது என்றும் சினிமா வட்டாரங்களில் பரவலாகப் பேசப்பட்டது.

ஆனால் பெரிய நட்சத்திரங்களின் படங்களோடு ''முதலாளி''யும் வெற்றிகரமாக ஓடி, வெள்ளி விழா கொண்டாடியது. இதை என் வாழ்நாளில் மறக்கவே முடியாது.

நான் பெரும்பாலும் பிரபல டைரக்டர்கள் பீம்சிங், ஸ்ரீதர், பி. மாதவன் போன்றவர்களின் படங்களில்தான் நடித்திருக்கிறேன்.

பீம்சிங் படங்கள் 'ப' வரிசையிலும், ஸ்ரீதர் படங்கள் 'நெ' வரிசையிலும் அமைந்தன.

பாவமன்னிப்பு, பந்த பாசம் – நெஞ்சம்மறப்பதில்லை, நெஞ்சில் ஓர் ஆலயம் போன்ற படங்களை உதாரணமாகச் சொல்லலாம்.

தினசரி சினிமா

நான் நடித்த அதிகமான படங்கள் வெள்ளிவிழா கண்டன. மற்றும் சில படங்கள் வெற்றிப் படங்களாக அமைந்தன'' என்கிறார் கம்பீரத்துடன் தேவிகா.

# பாப்பரசர் விஜயம்

# பாரதத்துக்குப் பெருமை

## வரவேற்பு உரையில் ஜனாதிபதி ஜெயில்சிங்

புதுடில்லி, பெப்,1

பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது ஜோன் போல் பாரதம் வந்துள்ளார். அவரது பத்துநாள் விஜயம் பாரதத்தில் வாழும் 1 கோடியே 10 இலட்சம் கிறிஸ்தவர்களுக்கு மட்டுமல்ல அனைத்து மக்களுக்குமே குறிப்பிடத்தகுந்த பெருமை தரும் நிகழ்ச்சியாகும்.

மேற்கண்டவாறு ஜனாதிபதி ஜெயில்சிங் பாப்பரசரை-விமான நிலையத்தில் நேற்று வரவேற்றுப்பேசும்போது குறிப்பிட்டார்.

ஜனாதிபதியுடன் பிரதமர் ராஜீவ்காந்தி மற்றும் அமைச்சர்கள் விமான நிலையத்தில் கூடி நின்று அவரை வரவேற்றனர்.

அவரது வருகையைப் பெருமைப்படுத்தும்விதத்தில் பீரங்கிகள் முழங்கின.

இராணுவம், கடற்படை மற்றும் விமானப் படை வீரர்களின் மரியாதை அணிவகுப்பு ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஜனாதிபதி ஜெயில்சிங் வரவேற்புரையில் தொடர்ந்து கூறுகையில், பல மதங்களின் பிறப்பிடமாக பாரதம்விளங்கி வந்திருக்கிறது. வேறு பலருடைய மதங்களின் இடமாகவும் பாரதம் விளங்குகிறது.

கிறிஸ்தவ மதம் இந்த நாட்டில் கி.பி. 52-ஆம் ஆண்டளவுக்கு பழைமை வாய்ந்ததாகும்.

இயேசு கிறிஸ்துவின் சீடர்களில் ஒருவரான புனித தோமஸ் பாரதத்தின் மேற்குப் பகுதியில் அப்போது வந்திறங்கியதாகக் கருதப்படுகிறது என்றார்.

பாரதத்துக்கு பாப்பரசரின் முதலாவது அரசு முறைப்பயணம் இது வெனத் தெரிவிக்கப்படுகிறது.

பொதுவான சமாதானத்துக்காகவும்கிறிஸ்தவ அமைப்புகளின் ஐக்கியத்துக்காகவும் மேற்கொள்ளப்படும் புனித பயணம் என இது ஏற்கெனவே வர்ணிக்கப்பட்டது.

கன்டர் பரி ஆர்ச்பிஷப் ஜோசப்இம்மாதம்9–ஆம் திகதியன்று பாரதம் வருவார்.

பாப்பரசருடனும் பாரதப்பிரதமருடனும் அவர் பேச்சு நடத்துவார் எனவும் எதிர் பார்க்கப்படுகிறது.

## தட்சரின் செல்வாக்கு வீழ்ச்சி

லண்டன், பெப்.1

அடுத்த பொதுத்தேர்தலுக்கு முன்னர் பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்கரட் தட்சர் ஓய்வு பெறவேண்டும்.

இப்படி பிரிட்டனில் பெரும்பான்மையான வாக்காளர்கள் கருதுகின்றனர்.

சுதந்திர ஒளிபரப்பு நிலையத்துக்காக ஹாரிஸ் ஆராய்ச்சி நிலையம் ஓர் அபிப்பிராய வாக்கெடுப்பை நடத்தியது.

அந்த வாக்கெடுப்பிலேயே 51சதவீதமானோர் பிரதமர் தட்சர் ஓய்வு பெறவேண்டும் என்று கருத்து வெளியிட்டனர்.

இரண்டு அமைச்சர்கள் ராஜினாமாச் செய்ததைத் தொடர்ந்து அரசியல் நெருக்கடி ஒன்றுக்குள் திருமதி தட்சர் சிக்கி இருக்கின்றார்.

வெஸ்ட்லாந்து விவகாரம் குறித்து பிரதமர் தட்சர் வெளியிட்ட காரணம் நம்பமுடியாமல் உள்ளது என்று 55சதவீதமானோர் கூறினர்.

## 'என்டர்பிரைஸ்' விரைகிறது

மணிலா, பெப். 1

அமெரிக்க விமானந் தாங்கிக் கப்பல் 'என்டர்பிரைஸ்' பிலிப்பீன்ஸை நோக்கி பயணத்தைத் தொடங்கியுள்ளது.

இதற்கும் பெப்ரவரி 7இல் நடைபெற உள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கும் தொடர்பு இல்லை என்று அமெரிக்கத் தூதரகம் மறுத்துள்ளது.

அமெரிக்க விமானந் தாங்கிக்கப்பல் மணிலாவில் இருந்து 50 மைல் தொலைவில் உள்ள சுபிக் குடா கடற்படைத் தளம் நோக்கிச் செல்வதாக அறிவிக்கப்பட்டது.

**வெளி உலகில்**

## சலஞ்ஜர் விபத்து: காரணம் காணும்வரை விண்வெளி பயணம் ரத்தாகும்

வாஷிங்டன், பெப்.1

அமெரிக்காவின் விண்வெளி ஆராய்ச்சி நிலையம் (நாசா) தனது 'ஷட்டில்' விண்வெளிக் கப்பல் பயணத் திட்டங்களை ஒத்திப் போட்டுள்ளது.

ஜனவரி 28இல் இடம் பெற்ற சலஞ்ஜர் விபத்துக்கான காரணம் பற்றி அறிய நடத்தப்படும் விசாரணை முடியும்வரை, வேறு விண்வெளிப் பிரயாணங்கள் நடத்தப்படமாட்டா என்று நாசா அறிவித்து உள்ளது.

இந்த விபத்தில் ஏழு விண்வெளி வீரர்கள் மரணமானார்கள் என்பது தெரிந்ததே.

மணித்தியாலத்துக்கு 2,000 மைல் வேகத்தில் விண்வெளியை நோக்கிச் சென்று கொண்டிருந்த சலஞ்ஜர், ஏன் தீப்பந்தாக மாறிச் சிதறியது என்பது பற்றி ஊகங்கள் தெரிவிக்க நாசா இயக்குநர்கள் ரிச்சார்ட் ஸ்மித், வில்லியம் கிரஹாம், ஜெஸிமூர் ஆகியோர் மறுத்து விட்டனர்.

நடுவானில் நிகழ்ந்த இக் கோர விபத்து, சன நெருக்கமான பகுதிகளுக்கு ஆபத்தை உருவாக்கக் கூடியது என்று மட்டும் அவர்கள் தெரிவித்தனர்.

● சலஞ்ஜர் செலுத்தப்பட்ட சமயம் காலநிலை குளிர்ச்சி அடைந்த நிலையில் காணப்பட்டது.

● 7லட்சம் கிலோகிராம் எரிபொருள் இருந்த பிரமாண்ட குதத்தில் ஏற்பட்ட ஒழுக்குக் காரணம் திரவ ஹைட்ரஜன், திரவ பிராண வாயுவுடன் சேர்ந்து வெடித்து இருக்கலாம் என்பது.

● விசை தள்ளிகளாக இருந்த இரண்டு 'பூஸ்டர்' ரொக்கட்டுக்களில்ஏற்பட்டகோளாறு.

மேற்கண்ட காரணங்களில் ஒன்றுதான் விபத்தை ஏற்படுத்தி இருக்கலாம் என்று சுயேச்சையான ஆராய்ச்சி நிலையங்களும் பத்திரிகைகளும் கூறியுள்ளன.

## புலிகளைக் காக்க பௌத்த சங்கம்

தைபே, பெப். 1

புலிகளைக் காப்பாற்றுவதற்கு பௌத்தர்கள் முன்வந்துள்ளனர்.

அதிசயப்படாதீர்கள். தைவான் நாட்டில் உள்ள பௌத்தர்களுக்குத்தான் புலிகளைக் காப்பாற்றும் எண்ணம் வந்துள்ளது.

இதற்காக நிலையம் ஒன்றையே அவர்கள் ஆரம்பித்துள்ளார்கள்.

வங்காளத்தில் உள்ள புலிகளே இப்படிக் காப்பாற்றப்படும்.

இந்தியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் இருந்து புலிகள் தைவானுக்கு ஏற்றுமதியாகின்றன. அங்கு அவைகள் செல்லப் பிராணிகளாக வளர்க்கப்படுகின்றன.

ஆனால் இப்படிக் கொண்டு வரப்பட்ட எட்டுப் புலிகள் இறைச்சிக்காக இறைச்சிக் கடைக்காரர்களுக்கு விற்பனை செய்யப்பட்டு விட்டன.

இதை அறிந்த தைவான் பௌத்தர்கள் சங்கம்தான் புலி பாதுகாப்பு இயக்கத்தை ஆரம்பித்தது.

சீன பஞ்சாங்கத்தின்படி புலி ஆண்டு அடுத்த மாதம் ஆரம்பமாகிறது. அந்த ஆண்டுப் பிறப்பை ஒட்டி கொல்வதற்காகவே எட்டுப் புலிகளும் வாங்கப்பட்டதாம்.

காப்பாற்றப்படும் புலிகள் மிருகக்காட்சி சாலைக்கு அன்பளிப்புச் செய்யப்படும் – என்று பௌத்த சங்கப் பேச்சாளர் ஒருவர் சொன்னார்.

## நிராகரிப்பு

வாஷிங்டன், பெப்.1

லிபியத் தலைவர் மும்மர் கடாபியின் சமரச நிபந்தனையை அமெரிக்கா தூக்கி எறிந்தது.

ஐரோப்பாவில் பயங்கரவாதத்துக்கு முடிவு கட்டுவதானால் லிபியாவைத் தாக்குவதில்லை என்று அமெரிக்கா உத்தரவாதம் தரவேண்டும்.

இப்படி லிபியாத் தலைவர் கடாபி நிபந்தனை விதித்து இருந்தார்.

## ஒட்டுசுட்டானில் 4 பொலீஸார் பலி!

### புலிகள் சென்னையில் அறிவிப்பு

சென்னை, பெப். 1

ஒட்டுசுட்டானில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த மோதலில் பொலீஸ் தரப்பில் ஒரு சார்ஜன்ட் உட்பட நான்கு பேர் கொல்லப்பட்டனர். 5 பேர் காயமடைந்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் சென்னையில் விடுத்த அறிக்கை ஒன்றில் இந்த விவரங்களைத் தெரிவித்திருக்கிறார்கள்.

நேரடிச் சமர் ஒரு மணித்தியாலம் நீடித்தது. சமரில் பின்வாங்கியவர்கள் அப்பாவிப் பொது மக்களை சித்திரவதை செய்தது மட்டுமல்லாமல் சுட்டும் கொன்றிருக்கிறார்கள்.

இந்தச் சமர் நடந்த இடத்தில் இரண்டு பொலீஸாரும் மேலும் இரண்டு பேர் கொழும்பில் சத்திரசிகிச்சையின் பின்னும் உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவத்தில் போராளிகள் தரப்பில் சேதம் ஏதும் ஏற்படவில்லை. இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

### அங்குரார்ப்பண கூட்டம்

யாழ்ப்பாணம், பெப் 2

அஞ்சல் தொலைத் தொடர்புப்பகுதி இளைப்பாறிய உத்தியோகஸ்தர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் நாளை (திங்கட்கிழமை) ஆனைப்பந்தி உயர் கலைக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

நாளைகாலை பத்து மணிக்குபிரஸ்தாபஅங்குரார்ப்பணக் கூட்டம் நடைபெறும். இக்கூட்டம் முன்னர் நடைபெறுவதாக இருந்து ஒத்திவைக்கப்பட்டது.

### பிரேத வண்டி

வட்டுக்கோட்டை,பெப்.2

வட்டுக்கோட்டை காந்திஜீ கிராம அபிவிருத்திச் சபையினர் அப்பகுதி பொதுமக்களின் நன்மை கருதி பிரேத வண்டி ஒன்றை அமைத்து வருகின்றனர்.

கடந்த 5 வருடங்களுக்கு மேலாக உபயோகிக்கப்பட்டுவந்த மரத்தினால் செய்யப்பட்ட பிரேத வண்டி பழுதடைந்ததை அடுத்து இப்புதிய வண்டி இரும்பினால் செய்யப்பட்டு வருகிறது.

### ஆசிரியர் தட்டுப்பாடு குறித்து புள்ளிவிவரம்

கொழும்பு, பெப். 2

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய எத்தனை ஆசிரியர் தேவை என்று வடக்கு–கிழக்குக் கல்விப் பணிப்பாளர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டு உள்ளனர்.

கல்வி அமைச்சர் இது சம்பந்தமாக பணிப்புரை விடுத்துள்ளார்.

**மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்**

# கிளிநொச்சியில் இராணுவ ரோந்து அதிகரிப்பு

## இரவு நேரங்களிலும் நடமாட்டம்

கிளிநொச்சி, பெப்.2

கிளிநொச்சி நகரம் கடந்த சில தினங்களாக போர்க்கோலம் பூண்டு பதற்றநிலையில் உள்ளது. இராணுவ ரோந்துகளும் அதிகரிக்கப் பட்டுள்ளன. நகரப் பகுதி மக்கள் அச்சம் அடைந்து தூரஇடங்களை நாடிய வண்ணம் உள்ளனர்.

வியாழனன்று சுமார் ஏழு கனரக வாகனங்களில் முகாமிலிருந்து புறப்பட்ட இராணுவம் கிளிநொச்சி, இரத்தினபுரம், திருவையாறு பகுதிகளை நோட்டமிட்டு இராமநாதபுரம், கல்மடு பகுதிகளில் சோதனை நடத்தியது

அங்கு கனரக வாகனம் ஒன்று புதைந்ததால் அவர்கள் முகாமுக்கு திரும்ப முடியாதநிலைமை ஏற்பட்டது. ஹெலிக்கொப்டர்கள் இரவு பகலாக பறந்த வண்ணம் இருந்தன.

இது இவ்வாறிருக்க இராணுவ பொலீஸ் கூட்டுமுகாமுக்கு அருகில் உள்ளபரவிப் பாஞ்சான், திருநகர், கனகபுரம் பகுதிகளில் இராணுவத்தினர் இரவு வேளைகளில் நடமாடத் தொடங்கியுள்ளனர்.

இதனால் இப்பகுதி மக்கள் இரவில் வீடுகளில் தங்குவதற்கு அஞ்சுகின்றனர்.

கிளிநொச்சி நகரமும் அதனைக்கிட்டிய இடங்களும் பெரும் பதற்றத்திற்குள்ளாகி எந்தவேளையில் என்ன ஆகுமோ என இங்குள்ள மக்கள் பீதி அடைந்துள்ளனர்.

### பதவி உயர்வு

மட்டக்களப்பு,பெப்.2

மட்டக்களப்பு கல்வித் திணைக்களத்தில் கல்வி அதிகாரியாகபணியாற்றி வந்த திரு கே. தியாகராசா கல்விச் சேவைக் குழுவினால் பிரதமகல்வி அதிகாரியாக பதவிஉயர்த்தப்பட்டுள்ளார்.

## கத்தரித் தோட்டத்தில் இறந்து கிடந்த இளைஞர்

நல்லூர், பெப்.2

பொன்னுத்துரை சற்குணநாதன் (35 வயது) என்ற இளைஞர் மின்சாரம் தாக்கி கத்தரித் தோட்டத்தில் இறந்து கிடந்தார்.

இச்சம்பவம் 28 ஆம் திகதி கோப்பாய் தெற்கில் இடம்பெற்றது.

இவரது சடலத்தை கோப்பாய் தெற்கு கிராம சேவையாளர் திரு. சுப்பிரமணியம் யோகலிங்கம் யாழ் வைத்தியசாலையில்சேர்த்தார்.

மரண விசாரணையை யாழ் பதில் நீதிவான் திரு. க. கேசவன் நடத்தினார்.

மரண விசாரணையில் சாட்சியமளித்த ஒருவர் தெரிவித்ததாவது:–

சம்பவதினம் நான் தோட்டத்திற்குத் தண்ணீர் இறைக்கச் சென்றேன்.

அப்பொழுது கத்தரி செடிகளுக்கு மத்தியில் ஒருவர் நிர்வாணமாகக் கிடந்தார்.

அவரது முதுகைச் சுற்றி மின்சார வயர் காணப்பட்டது.

கையில் கிடந்த பை ஒன்றினுள் கத்தரிக்காய்களும் கிடந்தன.

பின்னர் கிராம சேவையாளருக்கு முறையீடு செய்து அவர் மூலம் சடலத்தை வைத்திய சாலைக்கு கொண்டு வந்தோம். – இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இவரது சகோதரி சரோஜினிதேவி பாலசுப்பிரமணியம் சாட்சியமளிக்கையில், இறந்தவர் 7 வருடங்களுக்கு முன்னரேயே எம்மை விட்டுப் போய் விட்டார். இவரது மனைவியையும் எனக்குத் தெரியாது. இதனால் இவரது சடலத்தை நான் உரிமை கோரவில்லை.

இப்படி அவர் தெரிவித்தார்.

# போதியளவு உணவுப் பொருள் தருவிக்க வேண்டுகோள்

காங்கேசன்துறை. பெப்,2

தற்போதுள்ள நெருக்கடி நிலையில் யாழ். மாவட்டத்தில் உணவுப் பஞ்சம் ஏற்படாதிருக்க போதுமான உணவுப் பொருள்களை தருவிக்க ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு யாழ். மாவட்ட ப. நோ. கூ. சங்கங்கள் உணவுக் கட்டுப்பாட்டு இலாகா, கூட்டுறவு மொத்த வியாபார ஸ்தாபனம் ஆகியவற்றுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளன.

யாழ். மாவட்ட ப. நோ. கூ. சங்கங்களின் ஆலோசனைக் கூட்டமொன்று தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்க மண்டபத்தில் நடைபெற்ற சமயமே இவ்வாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு. எஸ். சிவமகாராசா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் விடுக்கப்பட்ட மேற்படி வேண்டுகோளில் மேலும் தெரிவிப்பதாவது:–

யாழ். மாவட்டத்தில் சமீபகாலமாக நிலவும் சூழ்நிலையால் உணவுப் பஞ்சம் ஏற்படலாம் என அஞ்ச வேண்டியுள்ளது. ரயில் மூலம் பொருள்களை எடுத்து வருவதிலும் தடங்கல்கள் உள்ளன.

யாழ். அரசாங்க செயலக மறியல்போராட்டம் காரணமாகவும் உணவுப் பொருள்களின் வருகைக்கான ஏற்பாடுகள் தடைப்பட்டுள்ளன. ஆகவே கப்பல் மூலமும் ரயில்மூலமும் கூடுதலான உணவுப் பொருள்களை தருவித்து சேமித்து வைக்க ஆவன செய்யப்படவேண்டும்.

மேலும், பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள் அத்தியாவசிய பொருள்களைக் கூடுதலாகக்கொள்வனவு செய்வதற்காக மக்கள் வங்கி குறுகிய கால கடன் வழங்கி உதவ வேண்டும்.

இப்படி அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மண்ணெண்ணெய் மற்றும் எரிபொருள்களுக்கான பெர்மிட் குறித்து அரசாங்க அதிபரைச் சந்தித்து பேசவும் இக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

## ஆசிரியர் கலாசாலை பரீட்சை விண்ணப்பம்

யாழ்ப்பாணம், பெப்.2

ஆசிரிய கலாசாலை 1983 டிசம்பர் இறுதிப் பரீட்சையிலும் அதற்கு முன்னரும் சித்தி அடையாதோர் அல்லது நூன சித்தி அடைந்தோர் 10. 2. 86க்கு முன்னர் தத்தமது ஆசிரியர் கலாசாலை அதிபர் ஊடாக விண்ணப்பம் அனுப்ப வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு பாடத்தில் நூன சித்தியடைந்தோருக்குக் கட்டணம் 15 ரூபா ஆகும்.

2 பாடங்களுக்கு30 ரூபாவும் 3க்கு மேற்பட்ட பாடங்களுக்கு 40 ரூபாவும் கட்டணமாகச் செலுத்தப்படவேண்டும்.

இவர்களுக்கான பரீட்சை ஏப்ரல் மாதத்தில் நடைபெறும்.

மாதிரி விண்ணப்பப் பத்திரம் ஆசிரியர் கலாசாலை அதிபர்களிடம் உண்டு.

### 1000 நூல்கள் சேகரிக்கும் இயக்கம்

யாழ்ப்பாணம், பெப். 2

ஆனைக்கோட்டை ஞேமன் கத்தோலிக்க அரசினர் பாடசாலை மாணவர்கள் தமது நூலகத்துக்கு ஆயிரம் நூல்களைச் சேகரிக்கும் இயக்கத்தை ஆரம்பித்து உள்ளனர்.

இதோ
அறிமுகப்படுத்துகின்றோம்!
FROZEN FOODS
ஐஸ் கிறீம்
இன்சுவை, பல்சுவை, தரம், தராதரம்
இவற்றை ஒரே நேரத்தில்
உங்கள் மழலைச் செல்வங்களுக்கும்
உங்கள் இல்லங்களுக்கு வருகைதரும்
விருந்தினருக்கும் களிப்பூட்ட பரிமாறுங்கள்!
FROZEN FOODS
ஐஸ் கிறீம்
என்றும் சிறந்ததையே வழங்கும்
செனித் மார்கட்டிங்
ஸ்தாபனத்தின் மற்றும் ஒரு புது முயற்சி
ஏகப் பிரதிநிதிகள்:
ஜோ: எகட்டன்
செனித் மார்கட்டிங், யாழ்நகர்.
ஏக கையிருப்பாளர்கள்:
வரணி மிஷன் பாம்
(விற்பனை நிலையம்)
145, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
மற்றவர்கள் செய்யும் சத்தியத்தை
நாங்கள் காப்பாற்றுகின்றோம்.
விலை விபரங்கள்:

| | |
|---|---|
| பிளாஸ்டிக் கப் (வனிலா] | 4-50 |
| சொக்கலேட் | 4-75 |
| பெமலி புளக் | 23-50 |
| கலன் | 140-00 |

கூடிய கொள்முதலுக்கும், விசேட ஓடர்களுக்கும் சலுகைகள் உண்டு.
விபரங்களுக்கு:
வரணி மிஷன் பாம்
(விற்பனை நிலையம்) யாழ்நகர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதய சங்கற்பம்

நான் என்றோர் தனிப் பொருள் இல்லை; நானெனும் எண்ணமே வெறும் பொய்.

-- மகாகவி பாரதியார்

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை
இல: 15, 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24805, 22073
02-02-86 த. பெ. 23

# குடியுரிமையும் தமிழர் தனித்துவமும்

மலையகத் தமிழர்கள் சுமார் நான்கு லட்சம் பேருக்கு நல்லகாலம் பிறக்கப்போகிறது. அவர்களுக்கு இலங்கைக் குடியுரிமை கிடைப்பதற்கு வழி பிறந்திருக்கிறது. அதற்கான குடியுரிமைச் சட்டம் இரண்டே இரண்டு நாட்களில் விவாதிக்கப்பட்டு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுவிட்டது.

மலையகத் தமிழருக்குக் குடியுரிமை வழங்க அரசாங்கம் இணங்கி இருப்பதாகச் சுமார் இரண்டு வாரங்களுக்கு முன்னர்தான் அறிவிக்கப்பட்டது. தான் நினைத்ததைச் செய்யக்கூடிய ஆற்றலும் அதிகாரமும் அரசாங்கத்துக்கு இருக்கிறது. அதைவிட ஒருபடி மேலாக, தாம் செய்ய எண்ணியதை எத்தனை எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் செய்யும் துணிவும் தந்திரமும் மிகுந்தவர் எனப் பெயர் எடுத்தவர் இந்த நாட்டு ஜனாதிபதி. ஆகையால் குடியுரிமைச் சட்டத்தை அரசாங்கம் நிறைவேற்றும் என நம்ப இடமிருந்தது.

எனினும் தமிழ்மக்களுக்கு அற்ப உரிமை வழங்கப்பட்டாலும் அதற்கு எதிர்ப்புக் கிளப்புவதே இந்த நாட்டின் வரலாறு. அதனால்தான் பண்டா—செல்வா ஒப்பந்தம், டட்லி—செல்வா ஒப்பந்தம் ஆகிய தமிழர் நலன் பேணும் ஒப்பந்தங்கள் தடைப்படலாயின.

அந்தக் காரணம் கருதியே, குடியுரிமை ஒப்பந்தம் சுமுகமாக நிறைவேறுமா என்ற சந்தேகத்தை 17–1–86ஆம் திகதி இந்தப் பத்தியில் எழுப்பி இருந்தோம்.

எமது சந்தேகத்தை வலுப்படுத்தி ஊர்ஜிதம் செய்வது போல கடந்த 27-ஆம் திகதி தொடக்கம் மலையகத்தில் பெரும்நெருக்கடி நிலைமை ஏற்பட்டது. வன்செயல்கள் கட்டவிழ்த்துவிடப்பட்டன.

எனினும் அரசாங்கம் உறுதி குலையாமல் இருந்ததால் தீய சக்திகளால் வன்செயல்களுக்கு வலுவூட்ட முடியவில்லை. தான் பிடித்த முயலுக்கு மூன்று கால்கள் என்று சாதிக்கும் செயல்திறமையை அரசாங்கம் நிரூபித்துவிட்டது. வரவேற்கலாம்.

குடியுரிமைச் சட்டத்தை நிறைவேற்றினாலும் அதனைச் சரிவர நடைமுறைப்படுத்துவார்களா என்பதே அடுத்து எழும் சந்தேகம். 1964இல் ஏற்படுத்தப்பட்ட இலங்கை—இந்திய ஒப்பந்தம் சரிவர அமுல் செய்யப்படவில்லை. அந்த அனுபவத்தை மலையக மக்கள் இன்னும் மறக்கமாட்டார்கள்.

இலங்கை—இந்திய ஒப்பந்தத்தை அமுல் செய்வதில் தோட்ட நிர்வாகங்களும் அரச இயந்திரமும் வேண்டாவெறுப்பாகவும் ஆமை வேகத்திலும் இயங்கியதை எல்லோரும் அறிவார்கள். பிரச்சினை இந்தளவுக்கு நீளுவதற்கும் அதுவே பிரதான காரணம்.

பதினெட்டு மாத காலத்திற்குள் குடியுரிமை வழங்கும் வேலைகளைச் செய்துமுடிக்க வேண்டும் என்பது ஒப்பந்தம். அது நடைமுறைச் சாத்தியமோ என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

குடியுரிமை விவகாரத்தை அவசர காரியமாக்கி அரசாங்கம் சட்டத்தை நிறைவேற்ற உந்துசக்தியாக விளங்கியவர் அமைச்சர் தொண்டமான். அந்தப் புகழை வேறு எவரும் தட்டிக்கொள்ள முடியாது. சுமார் எட்டரை வருடங்களாக அமைச்சரவையில் ஒட்டிக்கொண்டு இருந்தமைக்கு, காலம் பிந்தியாவது நற்பயன் ஒன்றைத் தமது முயற்சியால் தேடிக்கொண்டுவிட்டார் அவர். தனக்கு வேண்டியதைச் செய்விக்கும் "காரியக்காரர்" ஆகவும் அவர் இப்போது பெயர் எடுத்திருக்கிறார்.

ஆனால் அவருக்கு இத்தோடு தலையிடி தீர்ந்துவிடப் போவதில்லை. மலையகத் தமிழர்கள் சகலருக்கும் விரைவாகவே குடியுரிமை கிடைப்பதாக வைத்துக்கொண்டாலும் அவர்கள் தமது மொழி, கலை, கலாசாரங்களைப் பேணி, தனித்துவத்தைக் காப்பாற்ற திரு. தொண்டமானால் உதவ முடியுமா என்பதே எதிர்காலப் பிரச்சினை.

குடியுரிமைச் சட்ட விவாதத்தில் பேசிய பல அரசாங்க உறுப்பினர்களின் பேச்சுகள் எல்லாத் தமிழ் மக்களினதும் கவனத்தை ஈர்க்க வேண்டியவை.

மலையகத் தோட்டங்களில் பௌத்த விகாரைகள் கட்டுதல், கட்டாயச் சிங்களப் போதனை நடத்துதல் ஆகிய தீவிரவாதத் திட்டங்கள் அவர்கள் மனதில் இருப்பதை அந்தப் பேச்சுக்கள் பிரதிபலித்தன.

பெரும்பான்மைச் சமூக மக்கள் மத்தியில் வாழ்ந்து கொண்டு, தொண்டமானும் அவரது சகாக்களும் எத்தனை காலத்துக்குத் தமிழனின் தனித்துவத்தைப் பேணுவார்கள் என்பதற்குக் காலமே பதில் சொல்லும்.

# பாவத்திலிருந்து மீட்புப் பெற ஒரே வழி இயேசுவே

தேவ சாயலாக, சிருஷ்டிப்புக்களின் சிகரமாக சிருஷ்டிக்கப்பட்ட மனிதன், மகோன்னதை தேவனின் சிறந்தவொரு கைவேலைப்பாடாய்விளங்கினான்.

அவனில் பாவமோ சாபமோ காணப்படவில்லை. வியாதியோ வேதனையோ அவனை அணுகவில்லை.

உன்னத தேவனோடு உலாவுகிற பாக்கியத்தை அனுபவித்து, ஏதேன் என்ற நந்தவனத்திலே — தேவனால் உண்டாக்கப்பட்ட அந்தத் தோட்டத்திலே, தேவனால் உருவாக்கப்பட்ட அந்தமனிதன் வாழ்ந்து வந்தான்.

தேவ கட்டளையை அவன் மீறியதால் பாவம் அவனுக்குள் பிரவேசித்து அவனை இழிவுபடுத்தித் தாழ்த்தியது.

ஒப்பற்ற தேவனோடு ஒன்றாக உலாவியவன், தேவ சந்நிதியில் நிற்க முடியாதவனாக ஓடி ஒளித்துக் கொண்டான்.

இந்த ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்தில் பிரவேசித்தன. தேவனுக்கும் மனிதனுக்குமிடையிலே பாவம் பிரிவினைச் சுவராய் வந்தது.

இந்தப் பாவத்தினாலே தேவனுக்கும்மனிதனுக்கு

## நித்தியசத்தியன்

மிடையே பெரும் பிளவு ஏட்பட்டது. மனிதன் பாவத்தின் சம்பளமாகிய மரணத்திற்குப் பாத்திரனாக ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டவனாக, தேவ கோபாக்கினையைத் தன் மேல் வருவித்துக் கொண்டவனாக இருந்தான்.

தேவனே, என்று இந்த மனிதன் பாவம் செய்தானோ, அன்றே அவனுக்கு ஓர் இரட்சிப்பை வாக்குப் பண்ணினார். காலங்கள் நிறைவேறிய பொழுது, தேவனால் வாக்குப்பண்ணப்பட்ட அந்த இரட்சகர் தீர்க்கதரிசிகளினால் முன்னுரைக்கப்பட்ட அந்த மீட்பர் பெத்தலகேம் என்னும் ஊரிலே ஆவின் குடிலிலே, தேவ மைந்தனாக, அவனியிலே அவதரித்தார்.

அவர் தான் "இயேசு"— அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார். இதுவே எல்லா ஜனங்களுக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியாகும்.

ஆனால் சத்துருவானவன் இயேசுவை வதைத்துச் சிலுவையிலே அறைந்து, கல்லறையிலே அடக்கம் பண்ணி காவல் வைத்ததோடு இயேசுவின் கதை முடிந்துவிடும் என்றெண்ணினான். ஆனால் இயேசு கிறிஸ்துவாகிய இரட்சகரோ மரணத்தைஜெயமாக விழுங்கினார் — மரணத்தின் கூரை உடைத்தார்—ஜெயவீரனாக மரணத்தினின்று உயிர்த்தெழுந்தார். உயிர்த்தெழுந்த இயேசுவோ, "மரித்தேன் ஆனாலும் இதோ சதா காலங்களிலும் உயிரோடிருக்கிறேன்" என இன்றும் வீரமுழக்கம் இட்டுக் கொண்டிருக்கிறார். ஏன்?

ஞானக்கதிர்

பாவப் படுகுழிக்குள் கண்கள் கட்டப்பட்டவர்களாக விழுந்து கிடக்கும் இவ்வுலக மக்களை இரட்சிப்பதற்காக —

பாவமென்ற சல்லடையிலே சலிப்பில்லாமல் சஞ்சரிப்போரை தன் சந்நிதி சேர்ப்பதற்காக —

உலக உல்லாசத்திலே மதி மயங்கியிருப்போருக்கு உன்னத வாழ்வு நல்குவதற்காக —

சிற்றின்பம் விரும்பி பேரின்பம் இழந்து கொண்டிருப்போருக்குப் பேரானந்தம் வாரி வழங்குவதற்காக —

உங்கள் பாவங்கள் எத்தனையோ, அத்தனை பாவங்களையும் மன்னிப்பதற்காக —

உங்கள் பாவக் கறைகளை கல்வாரியில் வடிந்த செங்குருதியால் கழுவ —

உளையான சேற்றிலே உழன்று கொண்டிருப்போரை உறுதியான கன்மலையாகிய இயேசுவில் நிலை நிறுத்த —

கோரப் பிசாசின் கொடுமையினால் குமுறிக் கொண்டிருக்கும் உங்களுக்குப் பூரண விடுதலை தர —

உங்கள் ஆத்துமாக்களைத் தாழ்ந்த பாதாளத்திலிருந்து மீட்டுவிட — உங்களைப் புது சிருஷ்டியாக்க — பரிசுத்தவானாக்க — நீதிமானாக்க — தன் பிள்ளையாக்க — ஒப்பற்றத் தேவனோடு ஒப்



புரவாக்க — நித்திய ஜீவனைத் தர — உங்களை முற்று முழுக்க இரட்சித்துத் தன் இராச்சியத்திற்குள் சேர்த்துக் கொள்ளவே ஆகும்.

நண்பர்களே! உங்களை அழைக்கும் அந்த அன்புக் குரல் கேட்கின்றதா? தயங்காமல் இயேசு அண்டை ஓடி வாருங்கள். உங்கள் பாவத்திலிருந்து மீட்புப்பெற ஒரே ஒரு வழிதான் உண்டு. அவ்வழி இயேசுவே.

## பொய்யாமொழி



குறள்:
மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்று அவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு.

பொருள்:
மக்களின் உடம்பைத் தொடுதல் உடம்பிற்கு இன்பம் தருவதாகும்; அம் மக்களின் மழலைச் சொற்களைக் கேட்டல் செவிக்கு இன்பம் தருவதாகும்.

## உலகில் வேறு எங்கும் இல்லாதவாறு மக்கள் வாழும் பகுதியில் இராணுவ முகாம்

### சுதுமலை பிரஜைகள் குழு மகஜர்

யாழ்ப்பாணம், பெப். 2

உலக நாடுகளில் இராணுவ முகாம்கள் குடிசனமில்லாத இடங்களில் தான் அமைக்கப் படுகின்றன.

ஆனால் இங்கே தமிழ் மக்கள் நெருக்கமாக வாழும் பகுதிகளில் தான் இராணுவ முகாம்கள் அமைக்கப்படுகின்றன.

நோய்க்கு வைத்தியம் செய்வதை விட்டு நோயாளியைக் கொல்லாதீர்கள்.

இப்படி சுதுமலை பிரஜைகள் குழு ஜனாதிபதிக்கு அனுப்பிய மகஜரில் கூறப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் அரசாங்கத்தையோ, ஆயுதபடையையோ எதிர்த்துப் போராடவில்லை.

படையினரை முதலில் மக்கள் நெருங்கி வாழும் பகுதிகளில் இருந்து அகற்றி தமிழ் மக்களின் உயிரையும் உடைமைகளையும் காப்பாற்றுங்கள். இனப்படுகொலையை உடன் நிறுத்தி பேச்சுக்கள் மூலம் பிரச்சினையைத் தீருங்கள்.

இப்படி ஜனாதிபதிக்கு அனுப்பிய மகஜரில் கூறப்பட்டுள்ளது.

## நவாலி வை. எம். சி. ஏ. நூலகம்

யாழ்ப்பாணம், பெப். 2

நவாலி வை.எம்.சி.ஏ. கட்டட நூலக அமைப்பு வேலைகள் இம்மாதத்தில் பூர்த்தி அடையவுள்ளன.

ஒல்லாந்து தேசத்து ஐ. சி. சி. ஒ. நிறுவனத்தின் அன்பளிப்பாகக் கிடைத்த மூன்றரை லட்சம் ரூபாவுடன் இக்கட்டட வேலைகள் ஆரம்பமாயின.

## பருத்தித்துறையில் பிரார்த்தனை கருத்தரங்கு

யாழ்ப்பாணம், பெப். 2

சுவாமி விவேகானந்தரின் ஜயந்தியை முன்விட்டு பிரார்த்தனையும் கருத்தரங்கும் இன்று மாலை 4 மணிக்கு பருத்தித்துறை இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் நடைபெறும்.

"இன்றைய சூழ்நிலையில் சுவாமி விவேகானந்தரின் பங்கு" என்னும் பொருளில் கருத்தரங்கு நடைபெறும்.

ஆச்சிரமத் தலைவர் சுவாமி சித்ரூபானந்தா தலைமை வகிப்பார்.

திரு. பா. இரகுநாதன், திரு. ச. செந்தூர்ராசா, செல்வி க. யோகராணி ஆகியோர் கருத்தரங்கில் பங்கு பெறுவார்கள்.

முகாமுக்குள் இருந்து மோட்டோ ஷெல் குண்டுகள்

# முல்லைத்தீவில் 10 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் அகதிகள்

## முக்கிய பாலங்கள் தகர்க்கப்பட்டதால் இராணுவம் வெளியேற முடியாத நிலை

கிளிநொச்சி, பெப். 2

முல்லைத்தீவுப் பகுதியில் போராளிகளுக்கும் ஆயுதப்படையினருக்கும் இடையில் தொடர்ந்து நடக்கும் மோதலில் பலர் காயம் அடைந்ததுடன் சுமார் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் அகதிகளாகியுள்ளனர்.

ஆயுதப்படையினர் முகாமிலிருந்து பீரங்கி வேட்டுக்களையும் மோட்டோஷெல் குண்டுகளையும் அடிக்கடி தீர்த்த வண்ணம் உள்ளனர். ஹெலிக்கொப்டர்கள் தாழப்பறந்து துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்து வருகின்றன.

இவற்றால் காயமுற்ற பலர் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டு இங்கிருந்து தினமும் அவசர சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு அனுப்பப்படுகின்றனர்.

வெள்ளி காலை திரு பி. மார்க்குப்பிள்ளை (65 வயது) திரு. வி. அன்னலிங்கம் (55 வயது) திருமதி ந. செலஸ்ரீனா (55 வயது) ச. றமேஸ் (25 வயது) ஆகியோர் அம்புலன்ஸ் மூலம் யாழ்ப்பாணம் அனுப்பி வைக்கப்பட்டனர்.

திருமதி மார்கிறற் மார்க்குப்பிள்ளை கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவுப் பகுதியில் தொடர்ந்துள்ள மோதலால் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை இயங்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் இவ்வைத்தியசாலைக்கு செல்ல முடியாத நிலையில் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் சமுகமளித்துள்ளனர்.

முல்லைத்தீவுப்பகுதியிலுள்ள சங்கிலிப்பாலம், வண்ணாங்குளப்பாலம், கரைச்சிக்குடியிருப்புப் பாலம், கள்ளப்பாடுப் பாலம் என்பன தகர்க்கப்பட்டுள்ளன என்று கூறப்படுகிறது. இதனால் இராணுவ வாகனங்கள் முகாமை விட்டு வெளியே செல்ல முடியாத நிலை எழுந்துள்ளது.

இதேவேளை முகாமை அண்மித்துள்ள செல்வபுரம், கோவில் குடியிருப்பு, கரைச்சிக் குடியிருப்பு, உண்ணாப்புலவு, வட்டவாகல், மாணக்குடியிருப்பு, கள்ளப்பாடு ஆகிய பகுதி மக்கள் சுமார் பத்தாயிரம் பேர் புதுக்குடியிருப்பு பாடசாலை, சூசையப்பர் கோயில், சனசமூக நிலையம் என்பவற்றில் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளனர்.

மேலும் பலர் வீடு வாசல்களைவிட்டு முல்லைத்தீவிலிருந்து வெளியேறிய வண்ணம் உள்ளனர்.

## பாப்பரசரின் இலங்கை விஜயம் நிச்சயம் இல்லை

— சுன்னாகம் செய்தியாளர் சபா. புஷ்பநாதன்

சுன்னாகம், பெப். 2

பாப்பரசர் அருளப்பர் சின்னப்பர் இலங்கைக்கு விஜயம் செய்வது நிச்சயம் இல்லை.

கொழும்பில் உள்ள வத்திக்கான் கிளைச் செயலக அதிபர் அம்புறோஸ் டீ. பாவோலி இந்தத் தகவலை வெளியிட்டார்.

இந்தியா வரும் பாப்பரசர் இலங்கைக்கும் விஜயம் செய்வார் என்று வெளிவந்த செய்தி ஊர்ஜிதம் அற்றது— இப்படி வத்திக்கான் கிளைச் செயலக அதிபர், முன்னாள் கிராமசபைத் தலைவரான திரு. ஆசீர்வாதம் ஹென்றிக்கு அனுப்பிய பதிலிலேயே இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

பாப்பரசரின் உத்தேச இலங்கை விஜயம் பற்றி திரு. ஆசீர்வாதம் ஹென்றி யாழ் ஆயர் ஊடாக கொழும்பில் உள்ள வத்திக்கான் தூதருக்குக் கடிதம் ஒன்று எழுதியிருந்தார்.

இலங்கைக்கு விஜயம் செய்யும் பட்சத்தில் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இம்சைக்குள்ளாகி இரத்தக் கண்ணீர் வடிக்கும் தமிழ் மக்களையும் நேரில் வந்து பாப்பரசர் பார்க்கவேண்டும் என்று திரு. ஆசீர்வாதம் ஹென்றி கோரியிருந்தார்.

பாப்பரசரின் இலங்கை விஜயம் பற்றித் தீர்மானிக்கப்படும்போது, திரு. ஆசீர்வாதம் ஹென்றி சமர்ப்பித்த ஆலோசனைகள் கவனத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும்என்று வத்திக்கான் தூதர் அறிவித்து உள்ளார்.

## ஆங்கில ஆசிரியர் புத்தூக்க வகுப்புகள்

யாழ்ப்பாணம், பெப். 2

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் ஆங்கிலபாடபோதனையின் தரத்தை உயர்த்தும் நோக்குடன் ஆங்கில ஆசிரியர்களுக்குப் புத்தூக்க வகுப்புக்கள் நடைபெற உள்ளன.

ஜனவரி, பெப்ரவரி, மார்ச் மாதங்களில் 4,7, 8ஆம் ஆண்டு வகுப்புகளில் ஆங்கிலம் போதிக்கும் ஆசிரியர்களுக்கான புத்தூக்க வகுப்புகளை யாழ், கல்வித் திணைக்களம் ஒழுங்கு செய்துள்ளது.

பாரிய விளைவுகளை ஏற்படுத்தும்

## நடவடிக்கையில் இறங்க வேண்டிய சூழ்நிலையில் நாம்

### அடகு வைத்தோர் துண்டுப்பிரசுரம்

யாழ்ப்பாணம், பெப். 2

பாரிய விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய நடவடிக்கைகளில் நாம் இறங்க வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

'வங்கி நிர்வாகமே!' என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட பிரசுரத்தில் இப்படிக் கூறப்பட்டுள்ளது.

அடகு வைத்து ஏமாற்றப்பட்டோர் என்ற பெயரில் வெளியான இத் துண்டுப் பிரசுரத்தில், 'மக்கள் வங்கியின் நாணயத்தையும் நேர்மையையும் இனியும் நம்பத்தயாரில்லை. மக்களை ஏமாற்றும் மக்கள் வங்கி தேவையும் இல்லை.

அடகு வைக்கப்பட்ட நகைகளைத் திரும்பப் பெற அடகு வைத்தோர் சங்கம் ஆக்கபூர்வமான சில நடவடிக்கைகளை மேற் கொண்டு வந்தது. அதற்கு நாம் பூரண ஆதரவு வழங்கி இருந்தோம்.

ஆனால் சங்கம் கலைக்கப்பட உள்ளதை அறிந்து விரக்தியும் வேதனையும் அடைந்த நாம் ஜனவரி 9 ஆம் திகதி மக்கள் வங்கிப் பிராந்தியக் காரியாலயத்துக்குச் சென்று அதிருப்தியைத் தெரிவித்தோம்.

ஜனவரி 20க்குள் நகைகளைத் திரும்பித் தராத பட்சத்தில் வங்கி பிராந்திய, கிளை முகாமையாளர்களை இராஜினாமாச் செய்யும்படியும் கோரியிருந்தோம்.

இனி நாம் எடுக்கப் போகும் நடவடிக்கைகளி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## குடியுரிமைச் சட்டத்துக்கு பிரார்த்தனை இயக்கம் காரணம் அல்ல என்கிறார் காமினி

கொழும்பு, பெப். 2

இன்று மலையகத் தமிழர் குடியுரிமை பெறுவதற்குக்காரணம் இ.தொ.காவின் பிரார்த்தனை இயக்கம் தான் என்று கூறப்படுவது தவறு.

இப்படி காணி, காணி அபிவிருத்தி, மகாவலி அமைச்சர் காமினி திஸநாயக்கா நாடாளுமன்றத்தில் சொன்னார்.

மலையகத் தமிழர் குடியுரிமைச் சட்ட விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையில் அமைச்சர் திஸநாயக்கா மேலும் சொன்னதாவது;

மலையகத் தமிழருக்குக் குடியுரிமை வழங்குவதால் எந்த ஒரு மாவட்டத்திலும் பெரும்பான்மை மக்களின் எண்ணிக்கை குறையும் என்று அஞ்சத் தேவை இல்லை.

கோஹந்த பிரிவை, நுவரெலியா மாவட்டத்துடன் சேர்ப்பதன் மூலம் அப்படியான பிரச்சினைகள் எழாமல் தவிர்த்துக் கொள்ளலாம்.

மலையகத் தமிழர் பிரச்சினையை தேசியப் பிரச்சினை என்று கருதித் தீர்வு காண அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

அரசியல் லாபம் கருதும் பிரச்சினையாக இதை பாவிக்கக்கூடாது.

குடியுரிமை பெறுபவர்கள் பெரும்பான்மை மக்களுடன் இணைந்து வாழ்வார்கள். அதன் மூலம் அவர்கள் தீவிரவாத சக்திகளுடன் சேர்வதைத் தடுக்க முடியும்.

இப்படி அவர் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

DIPLOMA IN COMPUTER
PROGRAMMING
WEEKEND-COURSE 6 Months)
BASIC LANGUAGE
ஆரம்பம்: 25 - 1 - 86
கட்டணம், ரூ. 1500|-
60 மணித்தியாலங்களுக்குக் குறையாத
PRACTICALS
Cantabia Institute
21, MAIN STREET, JAFFNA. T'Phone: 24201

# உதயன்

02. 02. 1986

TOEFL
Date of Exam: 8 - 3 - 86
Course begins on: 11 - 1 - 86
Course Fees: Rs. 250
Lecturer: Mr. KANDIAH NAVARENDRAN
Cantabia Institute
21, MAIN STREET, JAFFNA. T'Phone: 24201

## வித்தாரம்

எப்பிடிமுரளியாரே! நல்லாக் களைச்சுப் போய் இருக்கிறுய். எங்காலே இருந்து வாறுய்.

ஓகோ! கிளிநொச்சிப் பக்கம் போனனியோ! கமம் புலம் எல்லாம் எப்பிடி?

என்னத்தை விவசாயம் செய்யிறது. அங்கை இப்ப அடிக்கடி குண்டுச் சத்தமும் ஹெலிக்கொப்டர் சூட்டுச் சத்தமும்தானே நல்லா விளையுது. பிறகு பயிர் எப்பிடி விளையுறது. சரி தர்மபுரம், கண்டாவளை, கல்மடுப்பக்கம் பெரிய சண்டை நடக்குதாம் நீ கேள்விப்படயில்லையே.

அப்ப என்ன விசளம் அங்கைபோய் கதைச்சிட்டு வாறுய்.

கிளிநொச்சியிலை சண்டை எண்டால் முல்லைத்தீவிலை பெரிய போராம் எல்லோ நடக்குது. அதைக் கேள்விப்பட்டனியே.

முல்லைத்தீவிலை இருந்து சனம்எல்லாம் கிளிநொச்சிக்கு அகதியளாய் வந்திருக்குதுகளாம்.

முல்லைத்தீவு டவுனிலை இப்ப எண்ணிப் பாத்து ஐம்பதுசனம் இருக்குமோ எண்டது ஐமிச்சம் எண்டு வெள்ளிக்கிழமை மகாலமை அங்கையிருந்து வெளிக்கிட்டுவந்த ஒருத்தர் சொன்ஞர்.

அங்கை ஹெலிக்கொப்டாராலைமட்டும் சுடயில்லையாம். சீபிளேஞலையும் சுடுகினமாம். டவுனிலை மிஞ்சியிருக்கிறசனம், வீடுகளைவிட்டு வெளிக்கிட முடியாதநிலையிலை இருக்குதுகளாம்.

அகதியள் எண்டு சொல்லயிக்கை தான் நினைவுவருகுது. தமிழ் சிவிலியன்களைச் சுட்டுப் போட்டு, போராளிகளைச் சுட்டதாக பெரிய வீரமாய் "பொறுபுவத்" (பொய்ச்செய்தி) சொல்லுற அரசாங்கம் அகதிகள் விஷயத்திலையும் வெளிநாட்டு அரசாங்கங்களுக்கு பல கட்டுப்பாடுகளை வைச்சிருக்குதாம்.

தமிழ்ப்பகுதிகளிலைகஷ்டப்படுற அகதிகளுக்கு வெளிநாட்டு அரசாங்கங்கள், வெளிநாட்டுத் தொண்டர் ஸ்தாபனங்கள் உதவி செய்யிற தெண்டாலும் அரசாங்கம்மூலம்தான் செய்ய வேணும். பாதிப்புக்கு ஏற்றவாறு உதவி செய்ய முடியாது.

இதை தமிழ் மக்களோடை அடிக்கடி சம்பந்தப்படுத்திப் பேசப்படும் ஒரு வெளிநாட்டின்ரை தூதரகத்திலை வேலைசெய்யிறதொடர்பு அதிகாரி சொன்ஞராமப்பா.

அங்காலை தெற்காலை நடக்கிற இயற்கைச் சம்பவங்களால் அகதிகளாகிறதை ஒரு சாட்டுக்கு வைச்சிருக்கினம். அவைக்கு அள்ளிக் குடுத்தால்தான் தமிழ்ப்பகுதியளுக்குக் கொஞ்சமாவது கிள்ளித் தெளிக்கலாமாம். எப்பிடிஇருக்கு வேலை! தாங்கள்தான் உதவி செய்யாவிட்டாலும், மற்றவன்கள் குடுக்கிறதையும் எல்லே தட்டிப்பறிக்கிறுன்கள்!

கொண்டோடி

## ஒரு தமிழ், முஸ்லிம் எம்.பி. யாவது பேசவில்லை!

கொழும்பு, பெப். 2

மலையகத் தமிழருக்குக் குடியுரிமைச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் கடந்த வியாழன், வெள்ளிக்கிழமைகளில் விவாதிக்கப்பட்டபோது ஒரு தமிழ் அல்லது முஸ்லிம் எம். பி. யாவது பேசவில்லை.

அமைச்சர் தொண்டமான் கூட பங்களாதேஷில் இருந்தார்.

# தமிழ்நாடு, மத்திய அரசுகளின் நடத்தை சட்ட விரோதம்

## இந்தியன் எக்ஸ்பிரஸ் பேட்டியில் ஜே. ஆர்.

கொழும்பு, பெப். 2

இந்திய அரசும் தமிழ்நாடு அரசும் சட்ட விரோதமான முறையில் தமிழ்த் தீவிரவாதத் தலைவர்களை அகதிகளாக வைத்துள்ளன.

அவர்கள் பயிற்சி முகாம்களை நடத்தவும் ஆயுதங்களைக் கடத்தவும் இந்தியாவும் தமிழ்நாடும் அனுமதியும் அளித்துள்ளன.

இதை நான் இலங்கையில் உள்ள இந்தியத் தூதரிடம் தெரிவித்து விட்டேன்.

இப்படி இலங்கை ஜஞதிபதி ஜெயவர்த்தன 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளிதழுக்கு அளித்த பேட்டியில் சொன்ஞர். இந்தியாவில் உள்ள தமிழ்த் தீவிரவாதிகளின் பயிற்சி முகாம்களை மூட புதுடில்லி அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதன் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண இந்திய அரசு இலங்கைக்கு உதவவேண்டும்.

● இந்தியாவில் உள்ள இலங்கையர்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்பிவைக்க வேண்டும். இலங்கைக்கு எதிரான வன்செயல்களுக்குத் தளமாக இந்திய மண் பாவிக்கப்படுவதை நிறுத்த வேண்டும்.

இப்படி திரு. ஜெயவர்த்தன பேட்டியில் சொன்ஞர்.

## பாதுகாப்பு வலயம் பாதிப்பு

## யாழ்நகர் 50 வீதம் பலாலி 61 வீதம் வல்வெட்டித்துறை 85 வீதம்

நல்லூர், பெப் 2

யாழ் நகரில் 50 சதவீதமாஞேரும் வல்வெட்டித்துறையில் 85 சதவீதமாஞேரும் பலாலியில் 61 சதவீதமாஞேரும் பாதுகாப்பு வலயப் பிரகடனத்திஞல் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பிரஜைகள் குழு இணைப்புக் கமிட்டித் தலைவரான பேராசிரியர் கா. சிவத்தம்பி மேற்கண்டவாறு சொன்ஞர்.

நல்லூர் இந்து விடுதியில் நேற்றுக் காலை கையொப்ப இயக்கம் அங்குரார்ப்பணஞ் செய்து வைக்கப்பட்டது.

அதற்குத் தலைமை வகித்துப் பேசுகையிலேயே பேராசிரியர் சிவத்தம்பி மேற்கண்ட புள்ளிவிவரத்தை வெளியிட்டார்

பேராசிரியர் சிவத்தம்பி தொடர்ந்து சொன்னதாவது;

கிளிநொச்சி, முல்லைத்திவு, திருகோணமலை, மன்ஞர், அம்பாறை, வவுனியா மாவட்டமக்களும் பாதுகாப்பு வலயப் பிரச்சினையால் மட்டுமல்ல, அங்கு நடைபெறும் வேறு பிரச்சினைகளாலும் கஷ்டப்படுகின்றனர்.

பாதுகாப்பு வலயப் பிரகடனம் மக்களிடையே ஓர் அவசர நிலையைத் தோற்றுவித்துள்ளது.

இப்படி பேராசிரியர் சொன்ஞர்.

# கல்மடுவில் கனரக வாகனம் புதைந்தது

## போராளிகள் சுற்றி வளைத்துத் தாக்குதல்

விசுவமடு, பெப். 2

ரோந்து சென்ற ஆயுதப்படையினரின் கனரக வாகனம் ஒன்று கல்மடுப் பகுதியில் நிலத்தில் புதைந்தது.

இதனை அடுத்து போராளிகள் இப்படையினரைச் சுற்றி வளைத்தனர். இதன் காரணமாக வெள்ளிக்கிழமை பிற்பகல் கல்மடு, தருமபுரம் பகுதியில் விமான மூலமும் ஹெலிக்கொப்டர் மூலமும் கடும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

போராளிகள் எதிர்த் தாக்குதல் நடத்தியதால் விமானமும் ஹெலிக்கொப்டரும் உயரத்தில் பறந்த வண்ணமே தாக்குதல்களை மேற்கொண்டன. இதன் காரணமாக சேதங்கள் அதிகம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

விமானத்திலிருந்து போடப்பட்ட குண்டுகள் வெடித்த சத்தம் பல மைல் தூரத்துக்குக் கேட்டது. விசுவமடு, தருமபுரம்,புளியம்பொக்கணை, கல்மடு, வட்டக்கச்சி, முரசுமோட்டைப் பகுதிகளில் பெரும் பதற்றம் நிலவியது, பரந்தன் முல்லைத்திவு வீதியில் வாகனப் போக்குவரத்துகள் மிகவும் குறைந்து காணப்பட்டன.

கல்மடுப் பகுதியில் புதைந்த வாகனம்நேற்று வரை மீட்கப்படவில்லை.

வீதிகள் எங்கும் போராளிகள் ஆயுதத்துடன் செல்வதைக் காண முடிந்தது. தருமபுரம் பகுதியில் போராளிகள் வீதிகளில் நின்ற வண்ணம் ஹெலிக்கொப்டரையும் விமானத்தையும் தாக்கினர். தருமபுரம் பகுதியில் கடைகள் யாவும் பூட்டப்பட்ட நிலையில் இருந்தன.

புதைந்த வாகனத்தை மீட்பதற்காக இராணுவத்தால் சில பொதுமக்களும் அழைத்துச் செல்லப்பட்டனர்.

கல்மடுவுக்கு உள்ள அஞ்சாலம்படி சந்தி என்ற இடத்தில் வயல் வெளியின் மத்தியிலேயே இந்த வாகனம் புதைந்தது.

கல்மடுவுக்கு வாகனங்கள் செல்ல முடியாதவாறு சகல பாதைகளும் போராளிகளால் தடை செய்யப்பட்டிருந்தன. இதஞல் இராணுவம் கல்மடுவில் இருந்து வெளியே வரவோ கிளிநொச்சி நகரில் இருந்து கல்மடுவுக்குச் செல்லவோ முடியாத நிலை ஏற்பட்டது.

இதேவேளை போராளிகள் கல்மடுக் குளத்திலிருந்து நீரை வெளியே திறந்து விட்டதால்இராணுவ வாகனங்கள் மீட்பது கடினம் எனக் கூறப்படுகிறது.

புளியம்பொக்கணைநாக தம்பிரான் கோயில், கண்டாவளை அ. த. க. பாடசாலை, முரசுமோட்டை மகாவித்தியாலயம் போன்ற இடங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் தஞ்சமடைந்துள்ளனர்.

இவர்களுக்கு இப்பகுதி மக்கள் உணவளித்து வருகின்றனர்.

கடைசித்தகவல்கள்:

இரவும் விமானத் தாக்குதல் இடம்பெற்றது. இதஞல் பல வீடுகள் சேதமடைந்தன. ஒரு வீடு முற்ருக எரிந்தது. வயோதிபப் பெண் ஒருவர் காயமடைந்தார்.

## நடவடிக்கையில்..

(3 ம் பக்கத் தொடர்ச்சி)

ஞல் ஏற்படப்போகும் தாக்கங்களுக்கு பொது மக்கள், நிறுவனங்கள் முகம்கொடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

ஓய்வூதியக்காரர்கள், நிலையான வைப்புப் பணம் வைத்துள்ளோர் எமது நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

இப்படி அத்துண்டுப் பிரசுரத்தில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

## பீரங்கிப் படகி....

(1–ஆம்பக்க தொடர்ச்சி)

னர் என்றும் அவர்கள் விமானம் மூலம் அனுராதபுரம்அனுப்பப்பட்டனர் என்றும அறியப்படுகின்றது.

முல்லைத்தீவு முகாமிலிருந்து நேற்றுக்காலை புறப்பட்ட ஆயுதப்படையினரை நோக்கி ராக்கெட் லோஞ்சர்கள் தீர்க்கப்பட்டன. சிறிதுநேரத்தில் ஆயுதப்படையினர் முகாமுக்குத் திரும்பிவிட்டனர்.

## அல் - அக்ஸா தாக்கப்பட்டதற்கு

## இஸ்லாமிய முன்னணி கண்டனம்

யாழ்ப்பாணம், பெப். 2

பலஸ்தீன மக்களுக்கெதிரான இஸ்ரவேலர்களின் தொடர்ச்சியான பயங்கரவாத நடவடிக்கைகளையும் ஜெருசலம் அல்–அக்ஸா பள்ளிவாசல் தாக்கப்பட்டதையும் கண்டிக்கிருேம்.

யாழ்ப்பாணம் இஸ்லாமிய மக்கள் முன்னணி அறிக்கை ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;–

இஸ்லாமிய அரபுலகை ஆக்கிரமித்து, சின்ஞபின்னப்படுத்தி திட்டமிட்டு அழிக்கும் நடவடிக்கையில் இறங்கியுள்ள சர்வதேச பயங்கரவாதிகளான அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் ஓர் ஆயுதமே சியோனிச இஸ்ரவேலிய ரோபோக்கள்.

நீண்ட காலமாக சியோனிச இஸ்ரவேலர்களின் காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கைகளால், பலஸ்தீன மக்கள் தாக்கப்பட்டு, சீரழிக்கப்பட்டு அகதிகளாக பல நாடுகளில் நிம்மதியற்று வாழ்ந்து வருகின்றனர்.

வயோதிபர்,பெண்கள், குழந்தைகள் என்ற எவ்வித பேதமுமின்றி இஸ்ரவேல் இரத்த வெறியர்களிஞல் அன்ருடம் கொல்லப்படுகின்றனர். பலஸ்தீன மண் பிணக்காடாக்கப்பட்டு வருகின்றது.

சியோனிச யூத வேதவாதிகள் அரபு மக்களை அழிப்பதோடு மட்டும் நின்றுவிடவில்லை. உலக முஸ்லிம்களின் அனைவரினதும் புனித தலமான மஸ்ஜிதுல்– அக்ஸாவை ஆக்கிரமித்தவர்கள் இப்போது தாக்கவும் தொடங்கிவிட்டார்கள்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 10 லட்சம்...

(1–ஆம் பக்கதொடர்ச்சி)

மாக வாழும் பகுதிகளில் இருந்து இராணுவ முகாம்கள் அகற்றப்பட வேண்டும்.

✱ நீதியானதும் ஏற்புடையதுமான ஓர் அரசியல் தீர்வுக்கான பேச்சுக்களை மீளவும் மெய்யார்வத்துடன் தொடங்க வேண்டும்.

இம்மூன்று கோரிக்கைகளையும் முன்வைத்து இம் மாபெரும் இயக்கம்ஆரம்பிக்கப்பட்டது.

இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் சமயப் பெரியார்கள் உட்பட ஏழு பேர் முதலில் கையெழுத்திட்டு இந்த இயக்கத்தை ஆரம்பித்தனர்.

பேராசிரியர் எஸ். கைலாசநாதக் குருக்கள், யாழ்:ஆயர் அதிவண. தியோகுப்பிள்ளை, தென் இந்திய திருச்சபை யாழ் ஆதீனம், ஆயர்அதிவண. டி. ஜே. அம்பலவாணர், பேஷ்இமாம் மௌலவி, சதகத்துல்லா, பேராசிரியர் கு நேசையா, 'ஈழநாடு' ஆசிரியர்திரு என். சபாரத்தினம், வண்ணை வைத்திஸ்வரக் கோயில் பிரதமகுரு பிரம்மஸ்ரீ கைலாசநாதக் குருக்கள் ஆகியோரே இந்த எழுவரும் ஆவர்.

அன்னையர் முன்னணியினர், பிரஜைகள் குழுக்கள், பொது ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் கையொப்பமிட்டு இயக்கத்தைத் தொடர்ந்தனர்.

பேராசிரியர் கா. சிவத்தம்பி [illegible] தலைமைவகித்தார்.

[illegible] மேற்பட்ட பிரதிநிதிகள் இன்று கையெழுத்திட்டனர்.

## விளையாட்டரங்கு

### ஒலிம்பிக் விளையாட்டுக் கழக உதைபந்தாட்டம்

# இன்று இறுதி ஆட்டம்

## ★ நாவாந்துறை சென்.மேரிஸ் ★ ஊரெழு றேயல் மோதல்

யாழ்ப்பாணம், பெப்.2

திருநெல்வேலி பாரதி சனசமூக நிலைய ஒலிம்பிக் விளையாட்டுக்கழகம்நடத்தும்7பேர்கொண்டஉதைபந்தாட்ட நொக்கவுட் போட்டியின் இறுதி ஆட்டமும் பரிசளிப்புவிழாவும் இன்று நடைபெறுகின்றன.

இந்த ஆட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணியும்,ஊரெழுறேயல் விளையாட்டுக்கழக அணியும் மோதுகின்றன.

இறுதி ஆட்டத்துக்கு முன்னதாகஇரண்டுஉதைபந்தாட்டப் போட்டிகள் நடைபெறும்.

முதலாவதாக நடைபெறும் காட்சி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் கிறீன் பீல்ட் விளையாட்டுக்கழக அணியைஎதிர்த்துமயிலங்காடு பைவ் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி ஆடும்.

அடுத்து நடைபெறும் ஆட்டத்தில் இந்த நொக் அவுட் போட்டியில் மூன்ரும் பரிசைதட்டிக்கொள்வதற்காக இரு அணிகள் மோதுகின்றன.

இந்த ஆட்டத்தில் நாவாந்துறை சென்.நிக்லஸ் விளையாட்டுக்கழக அணியைஎதிர்த்து பாசையூர் சென்அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி போட்டியிடுகிறது.

மூன்ரும் இடத்தைப் பெறுவதற்கான ஆட்டம் நேற்று நடைபெற்றது.

சென் நிக்கலஸ்அணியும் சென்அன்ரனிஸ் அணியும் தலா மூன்று கோல்களைப் போட்டதால் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

இந்த ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்ததாலேயேமீண்டும் இன்று போட்டி நடைபெறுகிறது.

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் இப்போட்டிகள் நடந்து வருகின்றன.

இன்றைய போட்டிகளுக்கு பிரதமஅதிதியாக திரு. கே. கோபாலரத்தினம் (செயலக உதவி அரச அதிபர்) கலந்து கொள்வார்.

இப்போட்டிகளின் இறுதியில்வெற்றி பெற்ற கழகங்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும். யாழ். உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் டாக்டர் ஜே.பி.சி. பிலிப் பரிசில்களை வழங்குவார்.

பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகும் இப்போட்டிகள் கோண்டாவில் சந்திக்கு அண்மையில் உள்ள குமரன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

## கரபந்தாட்டம் இறுதியாட்டம் இன்று

யாழ்ப்பாணம், பெப். 2

யாழ்ப்பாணம் ஐயஞர் கோயிலடி சனசமூக நிலையம் நடத்தும் கரபந்தாட்டச் சுற்றுப்போட்டிக்கான இறுதியாட்டம் இன்று நிலையத்தின் ஆடுகளத்தில் நடைபெறுகிறது.

யாழ்ப்பாணம் வர்த்தக வங்கி முகாமையாளர் திரு. செ. இராகவன் இறுதியாட்டத்திற்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

இந்தச் சுற்றுப்போட்டி இருபிரிவுகளாக நடத்தப்பட்டது.

இரண்டாம் பிரிவுக்கான இறுதியாட்டம் இன்று 3.30 மணிக்கு நடைபெறும். இறுதியாட்டத்திற்கு தெரிவான திருநெல்வேலி சிவன் விளையாட்டுக் கழகம், ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகத்துடன் மோதும்.

இன்று மாலை 4.30 மணிக்கு நடைபெறும் முதலாம் பிரிவு ஆட்டத்தில் பத்திரகாளி கோயிலடி வள்ளுவன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து திருநெல்வேலி சிவன் விளையாட்டுக்கழக அணி மோதும்,

இந்தச் சுற்றுப்போட்டியில் வெற்றி பெறும் அணிகளுக்கு சுற்றுக் கேடயங்களும், ரொக்கப் பரிசில்களும் வழங்கப்படவிருக்கின்றன.

## வலயம் வாபஸ்...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

தற்செயலாக ஏதாவது நடக்கலாம். இன்னும் அதிக கவனத்துடன் நடக்கும்படி பாதுகாப்புப் படையினருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

இப்படி அமைச்சர் கூறிஞர்.

மினிசினிமா

நவா மினி
(உஷா மினி முன்பாக)
✱ புதிய வெளியீடு
The Dirty Dozen
NEXT MISSION
வயது வந்தவர்களுக்கு மட்டும்
முழுக்க, முழுக்க தாக்குதல்
நிறைந்த மிகச் சிறந்த படம்,
முதன் முதலாக எமது
மினியில் மட்டுமே
காண்பிக்கப்படுகிறது.

திருநெல்வேலி பாரதி சன சமூக நிலையத்தின்
ஒலிம்பிக் விளையாட்டுக் கழகம் நடத்தும்–
உதைபந்தாட்ட
இறுதி ஆட்டமும் பரிசளிப்பு விழாவும்
இன்று பி. ப. 3-00 மணிக்கு
சென் மேரிஸ் வி. க. (நாவாந்துறை) எதிர் றேயல் வி. க. (ஊரெழு)
இடம்: குமரன் விளையாட்டு மைதானம்
பிரதம அதிதி: கே. கோபாலரட்ணம் (செயலக உதவி அரச அதிபர்)
பரிசளிப்பவர்: டாக்டர் ஜே. பி. சி. பிலிப்ஸ் (தலைவர், யாழ் உதைபந்தாட்ட லீக்)

காணி விற்பனைக்கு

கருகம்பனை நகுலேஸ்வரா வீதியில் வீடு, கடை, தொழிற்சாலை அமைக்கக் கூடிய ஏழு பரப்புக் காணி விற்பனைக்குண்டு.மே.பா. உதயன், விளம்பர இல. 2, இல. 15, 2ஆவது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

தேவை

நல்ல நிலையிலுள்ள டிமை காவ் அளவுள்ள ஹைடில்பேர்க் அச்சியந்திரம் விலைக்கு அல்லது நீண்டகால குத்தகைக்குத் தேவை. சகல விபரங்களுடனும் தொடர்பு கொள்ளவும். முகாமையாளர், தங்கஸ்கான், சுன்ஞகம்.

காணி விற்பனைக்குண்டு

புன்ஞலைக்கட்டுவன் தெற்கு சந்தி, ஆஸ்பத்திரி, பாடசாலை, கோயிலுக்கு அண்மையில் வீடு, கடை, தொழிற்சாலை கட்டக்கூடிய பத்துப் பரப்புக்கு மேற்பட்ட காணி உடன் விற்பனைக்குண்டு. 1981இல் பரப்பு எழுபத்தையாயிரம் கேள்வி. தற்போது நாற்பத்தையாயிரம் கேள்வி. தரகரும் தொடர்புகொள்ளலாம்.

மே.பா. உதயன்
விளம்பர இல: 2,
இல. 15, 2ஆவது ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

## அறிவித்தல்

**நயிஞதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் புதிய முகாமைத் திட்டத்தின் கீழ் வழிபடுநர் சபையை அமைத்தலும், அறங்காவலரைத் தெரிவு செய்தலும்.**

மேற்படி கோயில் புதிய முகாமைத் திட்டத்தின் கீழ் 1986 பெப்ரவரி மாதம் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள வழிபடுநர் சபையின் முதலாவது கூட்டத்திற்கு அங்கத்தவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அறங்காவலர் பதவிக்கு வேட்பாளராக நிற்க விரும்பும் ஒரு அங்கத்தவர் தமது பெயரினை அதனை முன்மொழிபவர் வழிமொழிபவர்களின் [அவர்களும் அங்கத்தவர்களாக இருத்தல் வேண்டும்.] பெயர் விபரங்களுடனும் அவர்களின் கையொப்பத்துடனும் 10-02-1986ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக எனக்கு அனுப்பி வைக்கவேண்டும். அல்லது அலுவலக நாட்களில் என்னிடம் கையளித்தல் விரும்பத்தக்கது.

மைதிலி சோமசுந்தரம்.
உதவி அரசாங்க அதிபரும்
புதிய முகாமைத் திட்டத்தின் கீழ்
வழிபடுநர் சபை அமைக்கத்
தகுதிவாய்ந்த உத்தியோகத்தரும்.

உதவி அரசாங்க அதிபர் பணிமனை,
வேலணை,
02-02-1986.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: தஷ்ரு உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட், 207, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 2 ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். வெளியிட்ட திகதி: 02-02-1986

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org